1994 ஏப்ரல் 26]

மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். பணிமனையுடன் நிறைய இடம் கோயில் நிலமாக இருப்பதால், வாடகை குறைவாக இருப்பதால் டையர் ரீ-ட்ரெட்டிங் போன்ற ஒரு பிரிவை பணிமனையுடன் இணைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு ஒன்றும் செய்யப்படவில்லை. நிலத்தை ஆர்ஜிதம் செய்ததற்குப் பிறகு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய வேகம் எனக்குத் தெரியும். அந்த வேகத்தின் அளவுக்கு போக்குவரத்துத் துறை இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 389, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 390, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

390--

பட்டுக்கோட்டையில் துணை மின்நிலையம் அமைத்தல்.

***19632**–திரு. கி.பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா -

(அ) பட்டுக்கோட்டையில் ஒரு துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பட்டுக்கோட்டையில் ஏற்கனவே, ஒரு 66 கி. வோ. துணை மின்நிலையம் இயங்கி வருகிறது.

(ஆ) இத் துணை மின்நிலையத்தை 110 கிலோவாட் மின் நிலையமாக மாற்றுவதற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒப்புதலையும் பெற்றுள்ளது. நிலம் கிடைக்க காலதாமதம் ஆகலாம் என்பதால் தற்போது பட்டுக்கோட்டையில் இயக்கத்தில் உள்ள 66/11 கே.வி. சக்தி கொண்ட ஒரு மின் நிலையத்திலேயே 110/11 கே.வி. மற்றும் 110/66 கே.வி. அமைக்கின்ற பணி நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் துவக்கப்பட உள்ளன.

[*1994 ஏப்ரல் 26*

முற்பகல் 10–35

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே அந்த மாதிரி ஒரு துணை மின் நிலையம் துவங்க இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு நன்றி. இருந்தபோதிலும் இந்த நில ஆர்ஜிதம் செய்யாது இருக்கிற காரணத்தால் அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு தெரிந்த வகையில் பட்டுக்கோட்டை நகராட்சி மன்றத்திலிருந்து நிலம் ஒதுக்கித் தர, 6 ஏக்கர் அல்லது 6¾ ஏக்கர் கொடுப்பதற்கு மின்சார துறைக்கு அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அவர்கள் வந்து அதைப் பரிசீலனை செய்து, இன்ஸ்பெக்ட் செய்து அந்தத் துணை மின்நிலையத்தை அமைக்க முன்வரவேண்டும் என்று நான் பலமுறை அவர்களை வேண்டிக் கொண்டேன். நிச்சயமாக இன்றைய நிலையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையில் டி.வி. நிலையம் அமைப்பதற்கு உறுதி அளித்திருக்கிறார்கள். அதற்கும் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும். கட்டிடம் இல்லாமல் தவிக்கிறது. இயல்பாகவே நகரத்தில் மின் விளக்குகள் அணையாமல் இருப்பதற்கும், நகரத்தில் மேலும் ஒரு தொழிற்சாலை துவங்கப்படக்கூடிய நிலை இருப்பதால் இந்தத் துணை மின்நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று நான் மிகவும் ஆர்வத்தோடு இருக்கிறேன். அதை மறுபரிசீலனை செய்து நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே அந்தத் துணை மின் நிலையம் துவக்க முன் வருவார்களா என கேட்டுக்கொள்கிறேன். மேலும் மதுக்கூர் ஒன்றியத்திலே ஒரு துணை மின்நிலையம், தஞ்சாவூரில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்து தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப்போல இந்தப் பட்டுக்கோட்டைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தை கையகப்படுத்துவது பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில தகவல்களை இங்கே சொன்னார்கள். பட்டுக்கோட்டையில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு 3.55 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு மின்சார வாரியம் முறையிட்டதைத் தொடர்ந்து பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்களால் அரசின் அனுமதி வேண்டி ஒரு கடிதம் சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், நகர நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு

1994 ஏப்ரல் 26]

வழிமுறையாக எழுதப்பட்டுள்ளது. தற்சமயம் அனுமதி வேண்டி எழுதப்பட்ட கடிதம் நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலகம், சென்னை, அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அரசின் அனுமதி கிடைக்க காலதாமதம் ஆகலாம் என்பதற்காகத்தான் மாற்று ஏற்பாடாக தற்போது பட்டுக்கோட்டையில் மின் அழுத்தத்தை சீர் செய்வதற்கு ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல் இயக்கத்தில் உள்ள 66/11 கே.வி. துணை மின்சக்தி நிலையத்தை 110/11 கே.வி. யாக மாற்றி அதையும் மீண்டும் 110/66 கே.வி. யாக அமைக்கின்ற பணி நடப்பு நிதி ஆண்டில் எடுத்துச் செய்ய பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் துணை மின்நிலையம் வருவதற்கு கால தாமதம் ஆனாலும் கூட நிலம் கையகப்படுத்துவதற்கான கால தாமதம் ஏற்படலாம் என்று இப்போது இருக்கின்ற நிலையை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு இந்தப் பணியை செய்ய இருக்கிறோம். ஆகவே, இந்தப் பணி செய்யப்படும். நிலம் கையகப்படுத்துவதற்கான அனுமதி கிடைத்தவுடன் அந்தத் துணை மின்நிலையம் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்தப் பணி துவக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நில ஆர்ஜிதம் என்பதிலே டிலே ஏற்படும் என்று சொல்கிறார்கள். அப்படி ஏற்படுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் உங்கள் மூலமாக. இருந்த போதிலும் மின்சாரத் துறை கடுமையான நடவடிக்கை எடுப்பார்களானால் ஒதுக்கப்பட்ட நிலத்தை அவர்கள் எடுத்துக்கொள்வதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆகவே, அதை இன்னும் துரிதமாக செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்துவதற்கு மின்சார வாரியம் கேட்கத் தான் முடியும். அந்தந்த துறைகளுக்கு எழுதி கேட்கிறோம். அரசினுடைய வழிமுறையாக அந்த அனுமதிகளை எல்லாம் ஒவ்வொரு துறையிலும் சென்று அதற்கான அனுமதிகள் வந்ததற்குப் பின்னர் கொடுக்கிறார்கள். காலதாமதம் என்பது ஒவ்வொரு துறையாக செல்லுகின்றபோது ஏற்படுகின்ற காலத்தைத் தவிர தாமதம் என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் முறைப்படி அனுமதிக்கப்

பெறுவதற்கு பல்வேறு துறைகளின் மூலம் சென்று வருகின்ற காரணத்தால் தான் கொஞ்சம் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்குள்ளாகத் தான் இந்தப் பணிகளை நான் சொல்லியிருக்கிறேன். எனவே, மாற்று ஏற்பாடாக இந்தப் பணிகள் நடக்க இருக்கின்றன. ஆகவே, துணை மின்நிலையமும் வரும்; இந்தப் பணிகளும் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *391*, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

391–

கூட்டுறவு சங்கத்தில் வீடுகட்ட கடன் வழங்குவதற்கு சிறப்பு ஆய்வுக் குழு ஏற்படுத்துதல்

****22121–டாக்டர் வெ. சரோஜா:***

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தாலுகா கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தில் வீடுகட்ட மானியத்துடன் கடன் வழங்கும்போது சரியான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு சிறப்பு ஆய்வுக் குழு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே வினா எழவில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களுக்காக வீட்டுவசதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு மாநில அரசால் மானியத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது, அரசு வகுத்துள்ள விதிமுறைகள் என்ன? அந்த பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் வட்ட அளவில் ஒரு குழு அமைத்து, அதன் மூலமாகப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS